தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (26.5.2023) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரையான்சாவடி அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கம் அமைக்கப்படுவது தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர் அவர்கள், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், பூவிருந்தவல்லி நகர்மன்றத் தலைவர் திருமதி.காஞ்சனா சுதாகர், துணைத்தலைவர் ஸ்ரீதர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.சரஸ்வதி மற்றும் சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அறிவிப்பு: 31 இடங்களில் அமைச்சர் ஆய்வு!

புதிய நாடாளுமன்றக் கட்டிடம்: குடியரசுத் தலைவர் திறக்க வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேட்டி!

சென்னை, மே.27-

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளில் 31 இடங்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023 24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (26.5.2023) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி, அன்னனூர், கோணம்பேடு அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம் அமைக்கப்படுவது தொடர்பாகவும், பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரையான்சாவடி அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கம் அமைக்கப்படுவது தொடர்பாகவும் மற்றும் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை, ராமாபுரத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படுவது தொடர்பாகவும் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட 50 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் விரைவு படுத்த வேண்டுமென்ற உத்தரவின் அடிப்படையில் 50 இடங்களையும் நேரடியாக சென்று கள ஆய்வு செய்ய முடிவு செய்து, சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளில் இன்றோடு (26.5.2023) 31 இடங்களில் கள ஆய்வு செய்திருக்கின்றோம். மீதமுள்ள 3 இடங்களையும் இந்த மாத இறுதிக்குள் நேரடியாகச் சென்று கள ஆய்வில் ஈடுபடவிருக்கின்றோம்.

இந்த 34 இடங்களிலும் நேரடியாக கள ஆய்வுக்குச் சென்று அமைக்கப்பட இருக்கின்ற விளையாட்டு மைதானமோ அல்லது பூங்காவோ, சலவைக்கூடமோ, பேருந்து நிலையமோ இது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டிய இடங்களை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களோடு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா அவர்களும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, அவர்களும், அந்தந்த மாவட்டத்தினுடைய ஆட்சியாளர்களுடன் சென்று கள ஆய்வினை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையிலே இன்றைக்கு 34 இடங்களிலே 30 வது இடமாக பூந்தமல்லி சட்டப்பேரவைக்குட்பட்ட இந்த பகுதியில் விளை யாட்டுத்திடல் அமைப்பதும், அதேபோல் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இடத்தில் புதிதாக ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிக் கூடத்தில் புதிய வகுப்பறைகளை கட்டிக்கொடுப்பதும், மதுர வாயல் சட்டப்பேரவை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கேற்ப புதிதாக பூங்கா அமைத்துக் கொடுக்கின்ற பணிகளையும் இன்றைக்கு கள ஆய்வு மேற்கொள்ள வருகைதந்தோம். அந்தவகையில் அன்பிற்கினிய முன்னாள் அமைச்சர் சா.மு. நாசர் அவர்களும், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களும் இந்த கள ஆய்விலே பங்கேற்றிருக்கிறார்கள்.

மீதமிருக்கின்ற இன்னும் 3 இடங்களை கள ஆய்வு மேற்கொண்டு 34 இடங்களையும் முழுமையாக கள ஆய்வு செய்து, விரைவில் திட்ட அறிக்கையை தயாரித்து ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டு மூன்று மாத காலத்திற்குள் இந்த 34 இடங்களிலும் பணிகளை துவக்க திட்டமிட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

இதுவரையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் இல்லாத அளவிற்கு இந்த முறை 50 பணிகளை சட்டப்பேரவையிலே அறிவித்திருக்கின்றோம். இந்த 50 பணிகளையும் வேகப்படுத்தி தினந்தோறும் இந்த பணிகளை குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு செய்து அதை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்குண்டான ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த ஆய்வுகளின் போது ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர், பூவிருந்த வல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் ராஜேந்திரன், நாராயணபிரசாத், பேபி சேகர், பொன் விஜயன், பூவிருந்த வல்லி நகர்மன்றத் தலைவர் திருமதி.காஞ்சனா சுதாகர், துணைத்தலைவர் ஸ்ரீதர், பெருநகர சென்னை மாநகராட்சி நொளம்பூர் மண்டலக் குழுத் தலைவர் ராஜன், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, என்.ரவிக்குமார், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.சரஸ்வதி, மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

டெல்லியிலே நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழா குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு அமைச்சர் பதில் அளித்து கூறுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பொறுத்தளவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் காலத்திலிருந்து ஒன்றிய அரசை பொறுத்தளவில் உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற தாரக மந்திரத்தோடுதான் இயங்கி வருகின்றோம். அண்மையில் தமிழக ஆளுநர் அவர்களுடன் ஏற்பட்ட சர்ச்சையிலும் கூட தமிழ்நாடு முதலமைச்சர் தெளிவாக விளக்கிக் கூறினார். ஆளுநர் நண்பர் என்று சொன்னாலும் நட்புக்காக கொள்கையிலே சமரசம் செய்து கொள்ள மாட்டோம் என்று கூறினார். அந்தவகையிலே டெல்லியிலே நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவில் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய குடியரசுத் தலை வர் அவர்களை வைத்துத்தான் அந்த கட்டிடத்தை திறக்க வேண்டுமென்ற நிலைபாட் டில் உறுதியாக இருக்கின்றோம். நாட்டின் உயர்ந்த பதவியில் இருக்கின்ற இந்திய குடியரசுத் தலைவர் அந்த கட்டிடத்தை திறந்து வைத்தால் தான் அது ஏற்புடையதாக இருக்கும் என்பதுதான் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களுடைய நிலைப்பாடு.

சென்னையிலே நேற்றைக்கு நடந்த ஒன்றிய நிதியமைச்சர் அவர்களின் நிகழ்ச்சியில் செங்கோல் தருவதற்குண்டான விளக்கத்தை எடுத்து கூறுகின்ற பத்திரிக்கையா ளர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டின் சார்பாக இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் என்ற முறையில் என்னை தமிழ்நாடு முதலமைச்சர் பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில் பங்கேற்க செய்தார்கள்.

"தமிழ், தமிழினுடைய கலாச்சாரம், தமிழினுடைய பெருமை, தமிழர்களுடைய பண்பாடு, மரபு இவைகளை பேணிக் காப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஒங்கி குரல் கொடுப்பதில் என்றைக்கும் சளைத்தவர்களாக இல்லை. அந்தவகையில் தமிழகத்திற்குண்டான பெருமை என்பதால் தமிழகத்தினுடைய பண்பாடு கலாச்சாரத்திற்கு ஒரு புகழ் என்பதால் தமிழகத்திலே உருவாக்கப்பட்ட இந்த செங்கோல் டெல்லி நாடாளுமன்ற மைய மண்டபத்திலே அமைய இருப்பதால் இதில் பத்திரிக்கை நிரூபர்கள் கூட்டத்தில் பங்கேற்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான சங்கடமும், வருத்தமும் இல்லை என்பதால் நேற்றைக்கு அதிலே கலந்து கொண்டோம். எங்களுடைய நிலைப்பாடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைபாடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிலைபாடு, டெல்லியிலே அமைய இருக்கின்ற நாடாளுமன்ற கட்டிடத்தை இந்திய குடியரசுத் தலைவர் தான் திறந்து வைக்கவேண்டுமென்ற நிலைபாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக காட்டாங்கொளத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.கழக சார்பில் ஒன்றியச் செயலாளர் சந்தானம் தலைமையில் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பிரதீப் உள்ளிட்டோர் உள்ளனர்.

கலைஞர் நகர் வடக்குப் பகுதி தி.மு.க. - இளைஞர் அணி சார்பில்

ஈடில்லா ஆட்சி - ஈராண்டே சாட்சி சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன்- தமிழ் கா.அமுதரசன் - தமிழச்சி தங்க பாண்டியன்- க.தனசேகரன் சிறப்புரை!

சென்னை, மே 27-

சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர் நகர் வடக்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை விளக்க தெருமுனைக்கூட்டம் இன்று (27.5.2023-சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தசரதபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.ஜெகதீஸ்வரன் தலைமை வகிக்கிறார்.

ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., மு.இராசா எம்.சி., கே.கண்ணன் எம்.சி., பா. வாசுகி பாண்டியன், எஸ்.டி. தங்கராசன், உ. துரைராஜ், பி.எஸ். முருகேசன், சுப. முத்துவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பழக்கடை எஸ்.பாஸ்கரன், தஞ்சை ஆர்.பாபு, மு. கோவிந்தராசன், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன், தமிழ் கா.அமுதராசன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., க.தனசேகரன் எம்.சி. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் பொன். வர.லோகு எம்.சி., ஆர்.ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா எம்.சி., நிலவரசி துரைராஜ் எம்.சி., ஆர்.சசிகுமார், என்.எம்.சுரேஷ், எஸ். அபுபக்கர், ஆலந்தூர் மலர் மன்னன், எஸ்.எம்.துரையரசன், சா.நாகராசன், பி.விஜயலட்சுமி, எஸ்.விஜயகுமார், துரை ரஞ்சித்குமார், சொ.ஜெயக்குமார், வி.ச. சங்கரன், சு.இளங்கோவன், க.அர்ச்சுனன், எஸ்.சண்முகம், அ.ஸ்ரீதர், டி.எஸ்.பி. தென்னரசு, ச.ரா.சீனிவாசன், கே.பாலமுருகன், ஆர்.டி.நல்லேந்திரன், அர.அ.எழில் வாணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக ஜி.கணேஷ், பி.கே.ரத்னகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

வி.ஆர்.சதீஷ்குமார் தலைமை! ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் - க.கோவிந்தராஜ் முன்னிலை!

அண்ணாநகர் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - சூர்யா கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

சென்னை, மே. 27

சென்னைமேற்குமாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் "திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி" எனும் தலைப்பில் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்இன்று(27.5.2023-சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சிந்தாமணி, ஆர்.வி.நகரில் நடைபெறுகிறது.

அண்ணாநகர் வடக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி. ஆர்.சதீஷ்குமார் தலைமை வகிக்கிறார்.

பகுதிக்கழகச்செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.சண்முகம், எம்.ஆசைதம்பி, எம்.பிரவீன்குமார், எம்.ஆர்.முரளி,பா.சாந்தசேகிகன், இ.விஷ்வாசம், ஏ. மணிகண்டன்,இ.குமார்,பி. கோட்டீஸ்வரன், எல். பிரபா, கே.வெங்கட், கே. திலீப், வி.ஜெகதீஷ், ஜே.கே. இமான், பி.லோக்ஆசீஸ் ஜி.ரகுராமன், எஸ்.கோபிநாத், ஜெ.மோகனரங்கன், கே.தமிழரசன், பா.ஆனந்த், து.பூபாண்டி, டி. பரந்தாமன், வி.முரளி, கார்த்திக், என்.பிரவீன்குமார், கே.வரதன், மா.சரவணன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச்செயலாளர்தயாநிதி மாறன்எம்.பி,அண்ணாநகர் சட்டமன்றஉறுப்பினர்எம். கே.மோகன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி,மாவட்டஇளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் எஸ். சேரன், ஏ.டி.முருகன், கராத்தே என்.ஆனந்தன், ராணி ரவிச்சந்திரன், கே.குட்டி (எ) சுப்பிரமணி, து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, மெட்டில்டாகோவிந்தராஜ் எம்.சி, வசந்தி பரமசிவம் எம்.சி, புஷ்பலதா ஜெய்சங்கர் எம்.சி,

சி.பி.திருமலை,ஆ.ஏகாம்பரம், கு.பாபு, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி.ஜெய்சங்கர், அருள்கண்ணன்,பா.பாபு,வி.சாய்செல்வம், கே.பி.சுரேந்தர், எப். மரியா, இரா.இளங்கோவன், வி.ராஜேந்திரன், ஜெ.வீரமணி, கே.பாலாஜி, எஸ்.ஜெயகாந்த்,இரா.வேல்முருகன்,வின்ஜாஸ்டாலின், எம்.மோகன், த.குணசேகரன், எம்.வாசு, எஸ்.செல்வம், நுங்கை எஸ்.சுரேஷ், எம்.கே.ஆனந்த், ஜே.எம். எஸ்.இம்ரான் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

101வதுவட்டஇளைஞர் அணி அமைப்பாளர் ஏ. அசோக்குமார் நன்றி கூறுகிறார்.

மயிலை த.வேலு - கே.எஸ்.ரவிச்சந்திரன் முன்னிலையில்

மயிலை மேற்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, மே 27-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (27.5.2023) மாலை 6 மணியளவில் மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் அவை தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மற்றும் கே.எஸ். ரவிசந்திரன் (தொகுதி பொறுப்பாளர்) முன்னிலையில் பகுதி கழக துணை செயலாளர்கள் ஆர்.எல். வி.அசோக், ப.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி. முருகையன் ஆகியோரின் வரவேற்பில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது .

பொருள்: முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு துவக்க விழா நிகழ்ச்சி, கழக உறுப்பினர் சேர்த்தல் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மயிலை மேற்குப் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தெரிவித்துள்ளார்.

காஞ்சி தெற்கு மாவட்டம்

இலத்தூர் தெற்கு ஒன்றியக் கழக செயற்குழுக் கூட்டம்!

ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.எஸ்.பாபு அறிக்கை!

இலத்தூர், மே.27-

காஞ்சி தெற்கு மாவட்டம் இலத்தூர் தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகளுக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.எஸ்.பாபு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

காஞ்சி தெற்கு மாவட்டம், இலத்தூர் தெற்கு ஒன்றியக் கழக செயற்குழுக் கூட்டம், காஞ்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஆலோசனைப்படி இன்று (27.5.2023 - சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர் கொடூர் ஆர்.ஜெயபால் தோட்டத்தில் ஒன்றிய அவைத் தலைவர் ம.மணி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் ப.பத்மநாபன், க.அர்ச்சுனன், ஜெயலட்சுமி மகேந்திரன், ஜெ.மகாகணபதிராமன், மாவட்டப் பிரதிதிகள் எஸ். டில்லிபாபு, ஆர்.பன்னீர் செல்வம், ஏ.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.எஸ். பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.